# திருவள்ளுவர் சுட்டிய உணர்வுகள்

முனைவர் ப.வனிதா
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
ஸ்ரீ கிருஷ்ணசாமி மகளிர் கல்லூரி
அண்ணா நகர் ,சென்னை-40

13

**ஆய்வுச்சுருக்கம்**

உயிர் இனத்தின் உள்ளத்தில் எழும் இயற்கை உணர்வுகளிலே உயிருக்கு உரமூட்டும் உன்னதமான உணர்வு நட்புணர்வு. நட்பு கொள்வதற்குத் தேவையான அடிப்படை உணர்வு நிலைகளாகத் தெளிவு, சகிப்புத்தன்மை, பொறுமை காத்தல், மனத்திண்மை ஆகியவற்றை திருவள்ளுவர் வலியுறுத்துகிறார். உலகத்து உயிர்களுக்குச் சுவாசமாய் விளங்கும் நட்பு என்னும் உணர்வு மட்டுமே இன்றளவில் மனித இனத்தை மனிதத்தோடு இயக்கிக் கொண்டிருக்கின்றது. நட்பில்லா மனிதன் என்றால் அவன் ஒரு மனிதன் இல்லை, நட்புக்கே உயிரைத் தந்தால் அவனைப் போன்று புனிதன் இல்லை. நீதிநூலாம் திருக்குறளை நாம் உள்ளத்தில் புகுத்தி நல்லுணர்வாம் நட்புணர்வை உலகில் நிறுத்தி மானுடம் செம்மையுற வாழ்த்துவோம்

**ஆய்வுநோக்கம்**

மனத்தில் எழும் பல்வகை உணர்வுகளில் வாழ்விற்கு வளம் சேர்க்கும் உள்ளத்திற்கு உயிர்ப்பூட்டும் நட்புணர்வினை ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமைகின்றது.

**திறவுச்சொற்கள்**

சேதாரம், இடைஞ்சல், கேண்மை, சிநேகம், மனத்திண்மை

**“தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட**

**பனையளவு காட்டும் படித்தால்…..”[1]**

பரந்த இவ்வுலகில் விரிந்து கிடக்கும் எண்ணிலடங்கா வாழ்வியல் தத்துவங்களை ஈரடி குறட்பாக்களால் படம் பிடித்துக் காட்டுவது தெய்வப் புலவரின் முப்பால். உலகத்தவர்க்கு “அன்பினை அடிப்படையாகக் கொண்டு இலக்கண இலக்கியக் கவசம் அணிவித்து, எப்பாலினும் சிறந்த முப்பாலினைப் பொழிந்து, அதில் தேன் தமிழும் கலந்து இதயத்தின் வாயிதழ் திறந்து ஊட்டுகின்ற அமிழ்தமே திருக்குறள்”[2] என்பார் முத்தமிழ் அறிஞர் கலைஞர்.

வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்த நம் முன்னோர்களின் கருத்துக் களஞ்சியமாகவும் சான்றோர்களின் வாயுறை வாழ்த்தாகவும் தெய்வநூலாம் வள்ளுவம் திகழ்கிறது.அதுமட்டுமன்றி மனிதன் தன் வாழ்நாளில் அறவழியில் நடந்து பொருள் ஈட்டி இன்பத்தில் திளைத்து வீடுபேறு அடைந்திடும் நெறிகளைக் கூறும் திருக்குறள், மனித மனத்தில் தோன்றும் உணர்வுகளையும் எண்ணங்களையும் வகைப்படுத்திக்காட்டுகிறது. மனத்தில் எழும் பல்வகை உணர்வுகளில் வாழ்விற்கு வளம் சேர்க்கும் உள்ளத்திற்கு உயிர்ப்பூட்டும் நட்புணர்வினைக் குறித்து நகர்கிறது இக்கட்டுரை.

**உணர்வு**

உணர்வு என்ற சொல்லுக்கு அழகியல், புலன் அனுபவம் ,புலன் தாக்கம் எனப் பல்வேறு விளக்கங்கள் தமிழ் விக்சனரியில் கொடுக்கப்பட்டுள்ளன. “நமக்குத் தேவையான உணர்ச்சியை, அறிவுப்பூர்வமாக சிந்தனை செய்து, நமக்கு வேண்டும் என ஏற்கும் திறனை உணர்வு”[3] என்கிறோம். மனித உடலில் ஏற்படும் அதிர்வலை உடம்போடு நின்றால் அது உணர்ச்சி. மனதிற்குச் சென்றால் அது உணர்வு. மனதின் மூன்று படிநிலைகளாக உணர்ச்சி ,உணர்வு, அறிவு இவற்றைக் கூறலாம். அறிவும் உணர்ச்சியும் சேர்ந்த நிலையில் தோன்றுவது உணர்வாகும். உயிர் இனத்தின் உள்ளத்தில் எழும் இயற்கை உணர்வுகளிலே உயிருக்கு உரமூட்டும் உன்னதமான உணர்வு நட்புணர்வு .

நட்பு

மனிதன் குழந்தைப் பருவம் முதல் முதுமை வரை அன்பு,காதல்,கோபம்,அச்சம் கருணை, இன்பம், துன்பம் எனப் பலவித உணர்வுகளுக்கு ஆட்படுகிறான். எல்லாக் காலத்தும் எந்தச் சூழ்நிலையிலும் மனதில் பட்டாம்பூச்சியாய் வண்ணக் கனவுகளைச் சிறகடித்துப் பிறரிடம் பகிர்ந்து கொள்ளும் உணர்வு நிலை நட்பு மட்டுமேயாம். இது மனித இனத்தின் உள்ள உணர்வின் ஊற்றாகத் திகழ்கிறது.

நட்பு என்னும் சொல் ”கேண்மை, உறவு, சினேகம்“[4] எனப் பல பெயர்களில் வழங்கப்பட்டாலும், இதற்கு வயது, பால், இனம், மொழி, நாடு, வசதி என்ற எல்லைகளின்றிப் புரிதல் ஒன்றிய அடிப்படையாகக் கொண்டு நம் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வதற்காகவே ஒவ்வொருவரின் நெஞ்சத்திலும் உற்பத்தியாகும் இன்ப ஊற்று நட்புணர்வு என்றால் மிகையாகாது.

“நட்பு நிபந்தனைகளற்ற உறவு. உறவுகளின் உச்சமாகவும் உரிமைகளிலும் உச்சியாகவும் கருதப்படுகிற உன்னதமான உணர்வு”[5].

மனித உயிரின் ஓர் அங்கமாக விளங்கும் நட்பு குறித்து வள்ளுவர் கிட்டத்தட்ட எண்பதிற்கும் மேற்பட்ட குறட்பாக்களில் எடுத்தாண்டுள்ளார். நட்பு எப்போது எப்படி யார் மீது உண்டாகும் என்பது தொடங்கி, யார் யாரிடம் நட்பு கொள்ள வேண்டும், நட்பு கொண்டபின் எப்படித் தக்க வைத்துக் கொள்வது, அந்த நட்பினை ஒரே சீரான நிலையில் கொண்டு செல்வது என்பதற்குப் பலவித அறிவுறுத்தல்களைக் காணலாம்.

நட்பு என்ற உணர்வு மனதில் தோன்றும் பொழுது மனதில் ஒரு தெளிவான நிலை மேம்பட வேண்டும் என்பது தெய்வப்புலவரின் கருத்தாகும். அவ்வகையில் நட்பு கொள்வதற்குத் தேவையான அடிப்படை உணர்வு நிலைகளாகத் தெளிவு, சகிப்புத்தன்மை, பொறுமை காத்தல், மனத்திண்மை எனச் சிலவற்றைக் கூறலாம்.

**தெளிவு**

பகிர்ந்து கொள்ளும்போது இரட்டிப்பாவதும் பலனை எதிர்பாராமல் விட்டுக் கொடுப்பதும் நட்பின் அடிப்படைத் தன்மையாகும். நட்புணர்வு ஒருவர் மீது தோன்றும்போதே அவரின் குணம், குடிபிறப்பு மற்றும் இனத்தாரின் இயல்பினை ஆராய்ந்து தெளிந்து யாரிடம் இந்த உணர்வை வெளிப்படுத்த வேண்டும் என்று சிந்தித்து நட்புக் கொள்வது சிறப்பாகும்.[6] தெளிந்தபின் நட்பு கொண்டால் துன்பமில்லை. தவறு செய்த நண்பனைத் திருத்தும் திறன் உடையவரிடம் நட்பு கொள்ள வேண்டும்.[7]

தீயோரை விலக்கி நல்ல குணமுடைய சான்றோரிடம் நட்புகொள்.[8] உயர்ந்த குடிப்பிறப்பும் தன் மீது சொல்லப்படும் பழிக்கு அஞ்சுபவரையும் பொருள் கொடுத்தாவது நட்பாக்கிக் கொள்வது நலம் பயக்கும்.[9] வருமுன் காக்கும் திறனுடையவரிடமே நட்பு கொள்ள வேண்டும்.[10] என நாம் நட்பு கொள்பவரை ஆராய்ந்து தெளிதல் மேன்மை தரும்.

**சிறந்த நட்பு**

ஒருவரை ஆராய்ந்து நட்பாக்கிக்கொண்டாலும் எல்லா நட்புகளும் மேன்மை தருவதில்லை. ஆயினும் நமக்குக் கேடு வராமல் காக்கும் மிகப்பெரிய உறவினைச் சிறந்த நட்பாகக் கருதலாம். சான்றோர் நட்பு பிறை போல வளரும். கீழோர் நட்பு தளரும்.[11]சிறந்த பண்புடையவர்களின் நட்பு நல்ல நூல் போல பயன் தரக்கூடியது.[12] மனம்விட்டுப்பேசி சிரித்து மகிழ்வதற்கு மட்டும் நண்பர்களைத் தேடிச்செல்லக்கூடாது. நம் தவறைக் கண்டிக்கும் உரிமையும் நண்பர்களுக்கு உண்டு.[13] இரு உள்ளங்களின் ஒருமித்த உணர்வினால் ஏற்படும் உணர்வே நட்பிற்கு அவசியமாகும். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாமல் முகமும் அகமும் மகிழ்ந்து கொள்ளும் தோழமையே சிறப்பிற்குரிய நட்பாகப் போற்றப்படுகிறது.

தனக்கு துன்பம் ஏற்பட்டுவிட்டது உதவ முடியுமா எனக் கேட்டு உதவுவது சிறந்த நட்பாகாது. ஆடை உடலில் இருந்து நழுவும் போது இயல்பாய் தடுக்கும் கைகளைப் போல நண்பன் துயரத்தில் தவிக்கும்போது தானே சென்று உதவுவனே சிறந்த நண்பனாவான்[14]. நம்மை விட உயர்ந்த பெரியோரின் நட்பே அரிதிலும் அரிதானது[15]. அதனை பெற முயற்சி செய்தல் நலம் பயக்கும் என்கின்றார் நம் வள்ளுவப் பெருந்தகை.

**சகிப்புத்தன்மை**

நம் மனதின் எண்ணங்களுக்கு ஒத்த குணம் உடைய நல்ல நண்பனை நாம் நட்பாகப் பெற்றோம் என்றால் மிகுந்த மகிழ்வு கொள்கிறோம். ஆனால் அந்த நட்புக்காக நாம் என்ன செய்தோம். நம்முடைய நண்பன் நம்மிடம் உரிமைகொண்டு தவறிழைத்தாலும் அதனை ஏற்றுப் பொறுத்துக் கொள்ள வேண்டும். அன்போடு பல நாள் நெருங்கிப் பழகிய நட்புறவினால் சிறு அழிவு நேர்ந்தாலும் சேதாரம் ஏற்பட்டாலும் நட்பைக் கைவிடாது பொறுத்துக் கொள்ள வேண்டும். நல்ல நட்பை பகைவரும் விரும்புவர். அதனால் உதவி செய்வதற்கும் உள்ளம் மகிழ்வதற்கு மட்டும் நட்பு தேவையில்லை சகிப்புத்தன்மையோடு நட்பினால் ஏற்படும் சிறு பிணக்குகளையும் இடைஞ்சல்களையும் தீமைகளையும் ஏற்று நடப்பதே நட்பிற்குப் பெருமை சேர்ப்பதாகும்.[16]

**முடிவுரை**

உலகத்து உயிர்களுக்குச் சுவாசமாய் விளங்கும் நட்பு என்னும் உணர்வு மட்டுமே இன்றளவில் மனித இனத்தை மனிதத்தோடு இயக்கிக் கொண்டிருக்கின்றது. நட்பில்லா மனிதன் என்றால் அவன் ஒரு மனிதன் இல்லை, நட்புக்கே உயிரைத் தந்தால் அவனைப் போன்று புனிதன் இல்லை. வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொள்ளக் காரணமாய் அமைந்த நீதிநூலாம் திருக்குறளை நாம் உள்ளத்தில் புகுத்தி நல்லுணர்வாம் நட்புணர்வை உலகில் நிறுத்தி மானுடம் செம்மையுற வாழ்த்துவோம் .

**அடிக்குறிப்புகள்**

1. பாடல் -5, கபிலர் திருவள்ளுவமாலை.
2. முகப்புரை, குறளோவியம், கலைஞர் மு. கருணாநிதி
3. தமிழ் விக்சனரி
4. தற்காலத் தமிழ்ச் சொல்லகராதி
5. பின் அட்டை, நட்பெனும் நந்தவனம், இறையன்பு
6. குறட்பாக்கள் -510,793

7. குறட்பா-795
8. குறட்பா-800
9. குறட்பா-794
10. குறட்பா-442
11. குறட்பா-782
12. குறட்பா-783
13. குறட்பா-784
14. குறட்பா-788
15. குறட்பா-443
16. குறட்பாக்கள்- 801-810

துணை நூற்பட்டியல்


1. இறையன்பு, நட்பெனும் நந்தவனம்,கற்பகம் புத்தகாலயம்.
2. கலைஞர் மு. கருணாநிதி குறளோவியம், பாரதி பதிப்பகம்.
3. டாக்டர் கே சந்தான ராமன், பூங்கொடி பதிப்பகம்.
4. தற்காலத் தமிழ்ச் சொல்லகராதி மேக் மில்லன் &கம்பெனி லிமிடெட்.
5. குறள் ஞானி கு. மோகனராசு, திருக்குறள் மக்கள் உரை
6. ta.wiktionary.org